Registered as a Newspaper

அழகிய கலை நயம் மிக்க
புதுமையான
22 KT தங்க
நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி; 23628

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

பெண்மைக்கு
பெருமேற்றும் இளமைக்கு
எழிலூட்டும் தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்
தொலைபேசி; 23628

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஐப்பசி மீ 5 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 17 (22-10-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 287







## தமிழர் தாயகக் கோட்பாட்டை ஏற்கிறேன்

# வடக்கு, கிழக்கில் தமிழர்களுக்கு ஆட்சி உரிமை வழங்கவேண்டும்

## குடாநாடு இப்போதே தனிநாடு;

### உண்மை நிலையை தெற்கில் தெரிவிப்பேன்

### செய்தியாளர் மாநாட்டில் விஜே தகவல்

யாழ்ப்பாணம், அக். 22

- ★ தமிழர்களுக்குப் பாரம்பரிய தாயகம் இலங்கையில் இருந்தது; இப்போதும் இருக்கிறது. தமிழர்களுக்குப் பாரம்பரியத் தாயகம் வேண்டும் என்ற கோட்பாட்டை நான் ஏற்றுக்கொள்கிறேன்.
- ★ வடக்குக் கிழக்கில் தமிழர்களுக்கு ஆட்சி உரிமை கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
- ★ யாழ்ப்பாணக்குடாநாடு ஏற்கனவே தனிநாடாகிவிட்டது. இங்கு தமிழ்ப்போராளிகளின் கட்டுப்பாட்டில் மக்கள் பாதுகாப்பாக வாழ்கின்றார்கள்.
- ★ யாழ்ப்பாணம் வந்த பின்னர்தான் எமக்கு உண்மை நிலை தெரிகிறது. அதனை நாம் தென்னிலங்கை மக்களுக்குத் தெரிவிப்போம்.

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. விஜய குமாரணதுங்கா தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமை அலுவலகத்தில் இலங்கை மக்கள் கட்சிப் பொதுச்செயலாளர்திரு. விஜயகுமாரணதுங்க நேற்றுக் காலை செய்தியாளர்களைச் சந்தித்தார்.

இச் சந்திப்பின்போது திரு. விஜயகுமாரணதுங்கவுடன், திரு.ஒஸி அபய குணசேகரா, மக்கள் கட்சி ஜா-எல அமைப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி திரு. கிட்டுவும் சமுகமளித்திருந்தார். வெளிநாட்டுச் செய்தியாளர் சிலரும் கலந்து கொண்டனர்.

செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் திரு.விஜய குமாரணதுங்க சொன்னதாவது:-

வட பகுதி வந்த பின்னர்தான் எமக்கு

(4-ஆம் பக்கம் பார்க்க)



கோட்டை இராணுவ முகாமின் முன்பாக பொலிஸ் நிலைய வாசலில் உள்ள தடைப்பகுதியில்வைத்து விஜயகுமாரணதுங்கவை புலிகள் வரவேற்கும் காட்சியை முதற் படத்தில் காணலாம்.

தாடியுடன் இடப்புறத்தில் காணப்படுபவர் கப்டன் கொத்தலாவலை. அவருக்கு அருகில் இடமிருந்து வலமாக கோட்டை இராணுவ முகாமுக்குப் பொறுப்பான அதிகாரி கேர்ணல் விமலரத்ன, கேர்ணல் ஆனந்த வீரசிங்க, புலிகளின் அரசியற் பிரிவு பொறுப்பாளர் திலீபன், புலிகள் முன்னணிப் பிரமுகர் ரஹீம், விஜய குமாரணதுங்கா, ஒஸி குணவர்த்தன ஆகியோர் காணப்படுகின்றனர்.

சுப்பிரமணியம் பூங்கா முன்றலில் புலிகள் மாவட்டத்தளபதி கிட்டு விஜேயை வரவேற்பதை இரண்டாவது படத்தில் காணலாம். நடுவில் ரஹீமும் வலது புறத்தில் ஒஸியும் காணப்படுகின்றனர்.

மழைக்கு நடுவில் விஜே அழைத்துச் செல்லப்படுவதை மூன்றுவது படத்தில் காணலாம். (உ)

புலிகளின் முகாமில் புலிகளினால் கைதுசெய்யப்பட்ட சிப்பாய்களுடன் விஜே உரையாடுகிறார். கிட்டு, ஒஸி, ரஹீம் அருகில் காணப்படுகின்றனர். (உ)

## புலிகளின்வாகனங்கள் தொடரணி செல்ல விஜே குழுவினர் பவனி

யாழ்ப்பாணம், அக். 22

நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்ட புலிகளின் வாகனங்கள் முன்னும் பின்னும் வர விஜே குழுவினர் யாழ் நகரை நேற்று வலம் வந்தகாட்சியை ஆயிரக்கணக்கான மக்கள் பார்த்தனர்.

விஜேயும் யாழ் மக்களுக்கு கை அசைத்து தமது நன்றியைத் தெரி

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ஹோட்டலில் சிற்றுண்டி அருந்தினர்

யாழ்ப்பாணம் அக். 22

யாழ் பஸ் நிலையப் பகுதியில் உள்ள ஹோட்டல் றெலக்ஸில் விஜே குழுவினர் நேற்று சிற்றுண்டி அருந்தினர்.

நேற்று நண்பகல் ஒரு மணி அளவில் விஜே குழுவினரை அழைத்து வந்த விடுதலைப் புலிகள் ஹோட்டல் றெலக்ஸுக்குள் நுழைந்த போது பெரும் எண்ணிக்கையில் சனக்கூட்டம் அங்கு கூடி இருந்தது.

விஜே தமது வாகனத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் நிபந்தனை குறித்து

# விஜே இன்று ஜே. ஆருடன் பேச்சு நடத்துவார்

யாழ்ப்பாணம்,அக் .22

சிறை பிடிக்கப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய்கள் விடுதலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் விதித்துள்ள நிபந்தனை பற்றி ஜனாதிபதியுடன், இன்று இலங்கை மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் விஜய குமாரணதுங்க பேசுவார்.

புலிகளின் நிபந்தனை குறித்து ஜனாதிபதியுடன் பேசி விட்டு அறிவிப்பதாக யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் முன்னர் திரு. விஜயகுமாரணதுங்க, விடுதலைப்புலிகள் பிரமுகர்களுக்கு உறுதியளித்தார்.

ஸ்ரீலங்கா அரசு சிறை வைத்துள்ள புலிகள் இயக்கப் போராளிகளில் இரண்டு பேரை விடுவித்தால் மட்டுமே சிறை பிடிக்கப் பட்ட ஸ்ரீலங்கா சிப்பாய்கள் விடுவிக்கப் படுவர் என்பதே புலிகள் விதித்த நிபந்தனையாகும்.

தடுப்பு முகாம்களில் உள்ள விடுதலைப் புலி

(4-ஆம் பக்கம் பார்க்க)

சிப்பாய்கள் விடுவிப்பு சம்பந்தமாக கிட்டு — விஜே பேச்சின் முழு விவரம் 3 ஆம் பக்கத்தில்

புதுக்கடைத்
திறப்புவிழா
லலிதா
ஜுவல்லறி
யாழ்நகரில்
மக்களின் அபிமானம் பெற்ற
லலிதா ஜுவல்லறி
ஸ்தாபனத்தார்
வாடிக்கையாளரின் நன்மை கருதி
இன்று புதன்கிழமை
காலை 10 மணிக்கு
கஸ்தூரியார் வீதி,
164ஆம் இலக்கத்தில்
புதிய கிளை ஸ்தாபனம் ஒன்றை
ஆரம்பிக்கின்றோம்.
இந்த வைபவத்தில் கலந்துகொள்ளும்
வண்ணம் நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
லலிதா ஜுவல்லறி
உரிமையாளர்: செல்லையா இந்திரசித்து

## கப்டன் கொத்தலாவலை மீண்டும் பொறுப்பேற்று அழைத்துச் சென்றார்

யாழ்ப்பாணம் அக். 22

தமிழீழ விடுதலைப் புலிகளினால் நேற்றுக் காலை பொறுப்பேற்கப்பட்ட ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் திரு.விஜய குமாரணதுங்காவும், உதவிச் செயலாளர் ஒஸி அபய குணசேகராவும், ஜா-எல அமைப்பாளர் திரு. பீலிக்ஸ் பெரேராவும் ஏனைய பத்திரிகையாளர்களும் நேற்றுமாலை 3-30 மணி அளவில் மீண்டும் கப்டன் கொத்தலாவலையிடம் ஒப்படைக்கப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

22-10-1986
புதன்கிழமை
சுபநேரம்:
4. 32 முதல் 6. 02 வரை
ராகுகாலம்:
12. 02 முதல் 1. 32 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# கோட்டை ராணுவ உயரதிகாரிகள் உயர்மட்டப் புலிகள் நேற்றுக்காலை உணர்ச்சிபூர்வ சந்திப்பு

— அலுவலகச் சிறப்புச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம்,அக்,22

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள இரண்டு முதலாம் இலக்க எதிரிகள் என்று கருதக் கூடிய இராணுவ உயர் அதிகாரிகளும், தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர் மட்டத் தலைவர்களும் நேற்றுக் காலை கைலாகு கொடுத்து, சுகம் விசாரித்து, மிக அன்னியோன்யமாக உரையாடி ஒரு சரித்திர நிகழ்ச்சியை உருவாக்கினர்.

இந்தச் சரித்திரச் சந்திப்பு நேற்றுக் காலை மழையின் மத்தியிலும் இடம் பெற்றது. கோட்டை இராணுவ முகாமுக்கு சற்றுத் தொலைவில் உள்ள பிரதான வீதியில் இரு சாராரும் நட்புறவுடன் சந்தித்த காட்சி உணர்ச்சி பூர்வமான தாகும்.

விஜய குமாரணதுங்கவையும் அவரது குழுவினரையும் வரவேற்பதற்காக விடுதலைப் புலிகள் தமது யாழ் மாவட்டத் தளபதி கிட்டுவின் தலைமையில் நேற்றுக் காலை யாழ் கோட்டை முகாமிற்கு அருகில் பிரதான வீதியை ஒட்டிய பகுதியில் காத்திருந்தனர்.

அவ்வேளையில் விடாது தூறிக் கொண்டிருந்த மழைக்கு மத்தியில் சுப்பிரமணியம் பூங்கா, நீதிமன்ற கட்டடப் பகுதி. வாடி வீட்டு முன்பக்கம் ஆகிய பகுதிகளில் போராளிகள் பெரும் எண்ணிக்கையில் நவீன ஆயு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி மூளி



அப்ப விஜே, வந்தார், பார்த்தார் போனார் அவ்வளவு தான். சிப்பாய்கள் விவகாரம் தொடர்கதை எண்டு சொல்லு பின்னை.....!

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திக்கொத்து

### கோரிக்கை

வட்டுக்கோட்டை அக். 22

சுழிபுரம் கிராம சபையின் முன்னாள் தலைவர் அமரர் திரு. சு. கந்தசுவாமியின் நிழற்படத்தை யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் சுழிபுரம் உப அலுவலகத்தில் திரை நீக்கம் செய்து வைக்குமாறு அமரர் கந்தசாமியின் நினைவஞ்சலிச் சபையினர் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-161)

### கோப்பாய் உ. அ. அதிபர்

அச்சுவேலி, அக். 22

கோப்பாய் உதவி அரசாங்க அதிபராக திரு. கே. குலேந்திரா நியமிக்கப்பட்டார்.

பாண்டியன் குளம் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. கே. குலேந்திரா கடந்த 15ஆம் திகதி தொடக்கம் கோப்பாய் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றி வருகிறார் (இ-11)

### பொருட்காட்சி

வேலணை, அக் 22

வேலணை கொத்தணி பாடசாலைகளினதும், வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி பிரிவு பாடசாலைகளினதும் கல்விப் பொருட்காட்சி வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்தில் வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி பண்டிதர் பொன் கணேசன் தலைமையில் நடைபெற்றது. (இ-167)

### வட்டுக்கோட்டையில் லியோ கழகம்

வட்டுக்கோட்டை அக். 22

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 'லியோக் கழகம்' ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியரும் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக உறுப்பினருமான லயன் போட்டரால் இக் கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-161)

### மாலுசந்தியில் கொள்ளை

கரவெட்டி, அக். 22

சில தினங்களுக்கு முன் மாலு சந்தியில் உள்ள மார்க்கண்டு என்பவருடைய வீட்டில் அதிகாலை 3 மணி அளவில் சுமார் 10க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொள்ளை அடித்தனர்.

துப்பாக்கி முனையில் நகைகளும் மற்றும் சில பொருள்களும் அபகரிக்கப்பட்டன. (இ-70)

### சைவசமய தீட்சை இலவசம்

ஐப்பசி வெள்ளி நன்னாளில் சமய தீட்சை வைக்கும் சைவசமய மன்றங்கள், தொண்டர் சபைகள், ஆலயங்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இயற்றிய 'நித்திய கரும விதி சைவ அனுட்டான விதி விளக்கம்' நூலை தபால் செலவுடன் விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்படி மில்க்வைற் ஸ்தாபனம் அறிவித்துள்ளது. (இ)

## நாகசுரம், தவில் தமிழ் மக்களின் கலைப் பொக்கிஷங்கள்

காங்கேசன்துறை அக்.22

நாகசுரம், தவில் ஆகியன மங்களகரமான வாத்தியங்கள் மட்டுமல்ல தமிழ் மக்களின் அரிய கலைப் பொக்கிஷங்களும் ஆகும். இவற்றை அருகி விடாமல் பாதுகாப்பது எமது கடமை. இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள நாகசுர – தவில் பாடசாலை இதற்கு வழிகோலவேண்டும்.

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய மண்டபத்தில் இயங்கும் நாகசுர– தவில் பாடசாலைக்கு வருகை தந்த தொழில் அதிபர் திரு. க. கனகராஜா பயிற்சியாளர்கள் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் வேலும் பேசுகையில் நாகசுர தவில் வாத்தியங்கள் கர்நாடக இசை வரம்பிற்கு உட்பட்டவை. மேலை நாட்டிலுள்ள 'பொப்' இசை போன்றவை இதற்கு அப்பாற்பட்டவை.

கர்நாடக சங்கீதம் மூலம் தான் ஆத்மீக சக்தி பெருக வாய்ப்பு உண்டு.

எமது கலைஞர்கள் மேலை நாடுகளுக்குச் சென்று பாராட்டுப் பெற்று வந்துள்ளனர். எமது கலைகளுக்கு மேலை நாடுகளில் நல்ல வரவேற்பு உண்டு.

ஆகவே இவற்றை நாம் முறையாகக் கற்று முன்னணியில் திகழ வேண்டும் என்றார்.

பயிற்சியாளர்களுக்கு அன்பளிப்புகளையும் அவர் வழங்கினர். (இ-68)


## பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி ● குவைத் ● இங்கிலாந்து ● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார். இதுவரை எமது பல பயணங்கள் வெற்றிகரமாகவும் விரைவாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்குச் செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள், மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது முகவர் 25 – 10 – 86 ஆம் திகதி நேரடியாக அழைத்துச் செல்வார்.

குவைத்துக்கு Airport Cleaners (ஏயார் போட் கிளினேர்ஸ்) ஆக செல்ல விரும்புபவர்கள் 24-10-86 ஆம் திகதிக்கு முன்பாக பாஸ்போட், 6 படங்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

பஸ் இல: 764
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தொடர்பு:
N. பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,

* உங்கள் நன்மை கருதி தீவுப் பகுதியில் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது.
* குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


# வடசகில் மதுவரித் திணைக்கள நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்

## 31 நிலையங்கள் மூடப்படுகின்றன

யாழ்ப்பாணம், அக்.22

வடபகுதியில் மதுவரித் திணைக்கள நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்ததைத் தொடர்ந்து; பல மதுவரி நிலையங்கள் முடப்படுகின்றன.

இவ்வகையில் 60 வருடங்களாக இயங்கி வந்த அச்சுவேலி ஊர்காவற்துறை மதுவரி நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

மதுவரித் திணைக்கள உயர் உத்தியோகத்தர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ளதால் குற்றவாளிகளைப் பிடிக்கவோ; வழக்குகளை பதிவு செய்யவோ முடியாதிருக்கிறது.

தவறணைகளில் கள்ளு விற்பனை குறைந்துள்ளது.

சீவல் தொழிலாளர் தமது கள்ளை, வீடுகளிலும் தனி இடங்களிலும் வைத்து விற்கிறார்கள். இதனால் தரமான கள்ளை பாவனையாளர்கள் பெற முடியாதிருக்கிறது.

ஒவ்வொரு மதுவரிநிலையத்திற்கும் 5 மதுவரி பரிசோதகர்களும் 10 காவலாளிகளும் தேவை. ஆனால் இரண்டு மதுவரி பரிசோதகர்களும் மூன்று காவலாளிகளுமே இப்போது உள்ளனர்.

கடந்த 5 வருடங்களாக எந்த ஒரு தமிழரும் மதுவரித் திணைக்களத்திற்கு தெரிவாகவில்லை,

இதே நேரத்தில் 120 சிங்களவர்கள் தெரிவாகி உள்ளனர்.

எனினும் இவ் வருடம் மட்டும் 20 தமிழர்கள் தெரிவாகி உள்ளனர்.

மதுவரி அலுவலகத்துக்குரிய இருவாகனங்கள் ஏற்கனவே கடத்தப்பட்டுவிட்டன. ஒருவாகனம் யாழ் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

வாகனங்கள் இல்லாததால் உத்தியோகத்தர்கள் திடீர் பரிசோதனை மேற்கொள்ள முடிவதில்லை;

இப்படி அந்த உத்தியோகத்தர் மேலும் சொன்னார் (இ-5)

## மரம் நட்டு நாட்டை வளம்படுத்துவோம்

வேலணை, அக்.22

இறைவன் மழைநீரை இலவசமாக தருகின்றார். அதன் மூலம் நாம் மரத்தை நட்டு நாட்டை வளமடையச் செய்ய வேண்டும்.

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற மரம்நடும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மில்க்வைற் தொழிலதிபரும் சிவதர்ம வள்ளலுமாகிய திரு. கனகராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. தா. சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற இம் மரம் நடும் விழாவில் தொழிலதிபர் கனகராசா தொடர்ந்து உரையாற்றுகையில் சோலையும், மலையும் தான் மழைக்கு காரணம் இதற்காகவேனும் நாங்கள் மரத்தை நடவேண்டும் என்றார்.

கடின உழைப்புக்கு நிகர் ஏதுமில்லை. நாட்டிலே எல்லோரும் உழைத்தால் எவரும் எவருக்கும் அடிமையாக இருக்கத் தேவையில்லை எம்மைத் தேடியே வருவார்கள் என்றார்.

விவசாய போதனாசிரியை திருமதி எஸ். சுப்பிரமணியமும் பேசினார்.

மரம் நடும் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் தொழிலதிபர் கனகராசா மரக்கன்றுகளை இலவசமாக வழங்கினார்.

விழாவில் பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எம். கே. முருகையா, வேலணை மேற்கு மருத்துவ மாது செல்வி. பாலாம்பிகை போன்றோர் கருத்துரைகள் வழங்கினார்கள். (இ-167)

### உள்ளூர் விதைகிழங்கால்

## வட பகுதி விவசாயிகள் பெரும் அளவு பாதிப்பு

நீர்வேலி, அக். 22

வடபகுதி விவசாயிகளுக்கு தரமில்லாத உள்ளூர் விதை கிழங்கு வருடாவருடம் திணிக்கப்பட்டதால் வடபகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

கோப்பாய் வடக்கு அம்பாள் கிளைநிலையத் திறப்பு விழாவில் தலைமை வகித்துப் பேசிய கிளைத் தலைவர் திரு. க. இ. குமாரசுவாமி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்; எமது பகுதி விவசாயிகளுக்கு உள்ளூர் விதைகிழங்கை திணிப்பதும், தென் பகுதி விவசாயிகளுக்கு இறக்குமதி செய்தவிதை கிழங்கை வழங்குவதும் அரசாங்கத்தின் பாரபட்சமான செயல்.

இவ்வருடமும் வட பகுதிக்கு உள்ளூர் விதை கிழங்கையே அரசாங்கம் திணிக்க இருக்கின்றது. ஆதலால் விவசாயிகள் ஒருவரும் விதைகிழங்கைப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

இப்படி அவர் கூறினார்.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர்.

திரு. க. சண்முகலிங்கம் பேசுகையில் இன்றைய காலகட்டத்தில் மக்களின் தேவைகள் யாவற்றையும் கூட்டுறவுச் சங்கங்களே பூரணப் படுத்துகின்றன.

உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி ச. பற்குணம் பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. சிவகுருநாதன், உதவி அரசாங்க அதிபர் கே. சபாபதிப்பிள்ளை வலி. கிழ. தெ. ப. ப. நோ. கூ. ச. தலைவர் திரு. செ. சபாரத்தினம் உட்படப் பலர் பேசினர்.

கிளைச் செயலாளர்:- தி. அரசபிள்ளை நன்றி உரை கூறினார். (இ-110)

### கட்டுப்பாட்டு விலையில் மண்எண்ணெய்

வேலணை அக். 22

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் சங்க எல்லைக்குட்பட்ட கிளைகள் மூலம் மண் எண்ணெய்யைக் கட்டுப்பாட்டு விலையில் விற்று வருகின்றது. (இ-167)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## ஆஸ்பத்திரி பாதுகாப்பை உறுதிப்படுத்துக

### நோயாளர் நலன்புரிச் சங்கம் அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், அக். 22

யாழ் ஆஸ்பத்திரியைப் பாதுகாத்து நோயாளர்களுக்கு தொடர்ந்து வைத்திய சேவை கிடைப்பதை உறுதிப்படுத்தவும்.

யாழ் – ஆஸ்பத்திரி நோயாளர் நலன்புரிச் சங்கத்தினரால் யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

யாழ் போதனா வைத்தியசாலையை நோக்கி ஷெல் தாக்குதல்கள் பல தடவைகள் நடைபெற்றுள்ளன.

இத் தாக்குதல்கள் நடைபெற்ற ஒவ்வொரு தடவையும் மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது வைத்தியசாலையின் மீது இனி தாக்குதல் நடத்தப்பட மாட்டாது என உறுதி அளிக்கப்பட்டது.

ஆனால் இந்த உறுதி தொடர்ந்து மீறப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் நடைபெற்ற ஷெல் தாக்குதல்களால் வெளிநோயாளர் பகுதி, நோயாளர் விடுதி, சைக்கிள் நிறுத்தும் இடம், குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு, போன்றவை சேதம் அடைந்துள்ளன.

நோயாளிகள் சிலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இறுதியாக கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற தாக்குதலில் மேக நோயச் சிகிச்சைப் பிரிவுக் கட்டடம் சேதமடைந்தது.

மேற்படி காரணங்களால் வைத்தியசாலை வைத்தியர்களும், மற்றும் ஊழியர்களும், தமதும் நோயாளிகளினதும்பாதுகாப்புக் கருதி வைத்தியசாலையை ஸ்தம்பிக்கச் செய்து உறுதியான தீர்வுக்காக போராடிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலைமை நோயாளர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதோடு பல உயிரிழப்புகளையும் ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது.

வடமாகாணத்தில் தற்பொழுது முழுமையான சேவையை வழங்கும் ஒரே ஒரு வைத்தியசாலையான யாழ். போதனா வைத்தியசாலையைப் பாதுகாத்து நோயாளர்களுக்கு தொடர்ந்து வைத்திய சேவை கிடைப்பதை உறுதிப் படுத்தவும்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## மாணவரிடையே மொழியாற்றல் குன்றி வருகிறது

புங்குடுதீவு, அக்.22

தமிழ் மாணவர்களிடையே மொழியாற்றல் குன்றி வருகிறது. பொதுப் பரீட்சைகளில் கட்டுரை வினாக்களுக்கு எழுதப்படும் விடைகள் இதனை புலப்படுத்துகின்றன. இந்நிலையை மாற்றுவதற்குப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டும். மாணவர்களின் மொழி ஆற்றல்களை விருத்தி செய்யப் போதிய வாய்ப்பளிக்க வேண்டும்.

இவ்வாறு கூறினார் புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலய அதிபர் திரு. துரைசிங்கம். [illegible] யத்தில் நடைபெற்ற [illegible] தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. துரைசிங்கம் தொடர்ந்து பேசுகையில் மாணவர்களிடம் காணப்படும் ஆற்றல்களை மேன்மேலும் வளர்ப்பதற்கு ஆசிரியர்கள் துணைபுரிய வேண்டுமென்றார்.

தமிழ்த் தினப் போட்டிகள் மாணவர்களது மொழித்திறனை விருத்தி செய்யப் பெரிதும் உதவுவதாகவும் அவர் கூறினார்.

ஆசிரியை திருமதி ச. சங்கரராசா ஆசிரியர் திரு. ம. இக்னேசியஸ் ஆகியோருட்பட வேறுபலரும் பேசினர். [illegible] பாட்டு– நாடக நிகழ்ச்சி [illegible] சிறப்பிடம் பெற்றன. (இ-131)

## தெல்லியூரில் இசை மாலை

யாழ்ப்பாணம், அக்.22

கலை இலக்கிய களத்தின் இரண்டாவதுமாலை நிகழ்ச்சிகள் 25ஆம்திகதி சனிக்கிழமை பி. ப 3–15 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு அருகில் அலங்கரிக்கப்படவுள்ளன.

சங்கீத பூஷணம் எல். திலகநாயகம் போல் மாலை தொடுத்து மகிழ்வித்து பேட்டியும் அளிக்கவுள்ளார்.

களத்தின் காப்பாளர்கள் பேராசிரியர் சு. வித்தியானந்தன் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு, பொ. சிவஞானசுந்தரம் ஆகியோர்சமூகமளித்துச் சிறப்பிப்பார்கள்.

கலாநிதி. நா. சுப்பிரமணியஐயர் இந்த இனிய மாலையைத் தொகுத்தளிக்கின்றார். (ஒ)

## விளையாட்டரங்கு

### காங்கேசன்துறை ம. வி. அணி 2 பிரிவுகளில் வெற்றி

பலாலி, அக். 22

காங்கேசன்துறை மகா வித்தியாலய மாணவர் அணிகளுக்கும் கட்டுவன் புலம் மகா வித்தியாலய மாணவர் அணிகளுக்கும் இடையில் நடைபெற்ற சினேக பூர்வ உதைபந்தாட்டத்தில் காங்கேசன்துறை மகா வித்தியாலய அணி 2 பிரிவுகளிலும் கட்டுவன் புலம் மகா வித்தியாலய அணி ஒரு பிரிவிலும் வெற்றி பெற்றன.

13 வயதுக்குட்பட்ட பிரிவு மாணவர்களில் காங்கேசன்துறை மகா வித்தியாலய அணி கட்டுவன் புலம் மகா வித்தியாலய அணியை 3–1 கோல்களால் வெற்றி பெற்றது.

16 வயதுக்குட்பட்ட பிரிவு அணிகளில் காங்கேசன்துறை மகா வித்தியாலய அணி கட்டுவன் புலம் மகா வித்தியாலய அணியை 2–1 கோல்களால் வென்றது.

19 வயதுக்கு மேற்பட்ட அணிகளில் கட்டுவன் புலம் மகா வித்தியாலயம் காங்கேசன் துறை மாக வித்தியாலய அணியை 3–1 கோல்களால் வென்றது (இ-119)

### இளம் தமிழர் மன்ற ஆண்டு நிறைவு கிரிக்கெட் போட்டி

காங்கேசன்துறை, அக். 22

காங்கேசன்துறை இளம் தமிழர் மன்றம் 28ஆம் ஆண்டு நிறைவையொட்டி நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அளவெட்டி இளைஞர் கழகமும், காங்கேசன்துறை யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் அளவெட்டி இளைஞர் கழகம் வெற்றி பெற்றது.

காங்கேசன்துறை நடேஸ்வரா விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

அளவெட்டி இளைஞர் கழகம் 8 விக்கெட் நஷ்டத்துக்கு 163 ஓட்டங்களையும், யங்ஸ்ரார் சகல விக்கெட்டுகளையும் இழந்து 58 ஓட்டங்களையும் பெற்றது.

அளவெட்டி சார்பில் நாவலன் 52 ஓட்டங்களையும், நாகேஸ்வரன் 48 ஓட்டங்களையும்,

யங்ஸ்ரார் சார்பில் நிர்மலன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

இப்போட்டிக்கு எஸ். தெய்வேந்திரனும், ஆர். தன்ராஜரத்தினமும் நடுவராகக் கடமையாற்றினர்.

இச்சுற்றுப் போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் காங்கேசன்துறை வென்ரஸ்ட் கழகமும், அளவெட்டி இளைஞர் கழகமும் மோதின இதிலும் அளவெட்டி இளைஞர் கழகமே வெற்றி பெற்றது.

மற்றொரு மோதலில் காங்கேசன் சிமெந்து பொழுது போக்கு கழகமும் ஊறணி விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் காங்கேசன் சிமெந்து பொழுது போக்குக் கழகம் வெற்றி பெற்றது.

தெல்லிப்பளை கிருஸ் கொப்பேஸ் கழகமும், காங்கேசன்துறை யங்ரோயலும் மோதின. இதில் கிருஸ்கொப்பேஸ் வெற்றி பெற்றது. (இ-68)

### தேவை

தென் இந்தியத் திருச்சபை யாழ் ஆதீனம் அகதிகள் வீடமைப்புத் கட்டம் 1. மாங்குளம் 2. இயக்கச்சி மேற்படி நிலையங்களில் தங்கியிருந்து பணியாற்றக்கூடிய கட்டட மேற்பார்வையாளர்கள் உடனே தேவை. திறமைக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற சம்பளமும் இருப்பிட வசதியும் கொடுக்கப்படும். விபரங்களுடன் நவம்பர் 5க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

வண. சாம் தம்பு, செயலாளர், தென்னிந்தியத் திருச்சபை காரியாலயம். வட்டுக்கோட்டை.


யாழ் மக்களுக்கோர் மகிழ்ச்சிகரமான செய்தி!

இல்லத்தரசிகளுக்கோர் இனிமையான செய்தி!!

பலவகையான KEELS (கீல்ஸ்)

உணவுப் பொருள்கள் கொழும்பு விலையில் யாழ் நகரில்!!!

Cristombo Farm

BROILERS - 1 Kg 62–50

அங்கீகரிக்கப்பட்ட வடமாகாண விநியோகஸ்தர்

THE MEDICAL HALL
No. 224, Hospital Road, - JAFFNA.
Phone: 22575



★ மீண்டும் கமட் ★

யாழ்ப்பாணம் - கொழும்பு பஸ்சேவை

26 - 10 - 1986 முதல்

உங்கள் ஆசனங்களுக்கு, முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்

யாழ்: "நிப்பொன்"
ஸ்ரான்லி வீதி, - யாழ்ப்பாணம்

தெல்லிப்பளை:- "இறீல் ஸ்ரோஸ்"
தெல்லிப்பளை.

புறப்படும் இடம்-
தெல்லிப்பளை சந்தியில் இருந்து யாழ்ப்பாணம் நிப்பொன் முன்பாக


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதயசங்கற்பம்**

மற்றவர்களுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்பவருக்கு மட்டுமே விடுதலை கிடைக்கும்.

—சுவாமி விவேகானந்தர்


# உதயன்

உண்மை - விசுவாசம் - நடுநிலை

இல. 15, 2வது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம். 22-10-1986 த. பெ. இல. 23


## ஆசிரியர் இடமாற்றத்துக்கு இப்படி ஒரு நிபந்தனை ஏன்?

வெளி மாவட்டங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெறுவதற்குத் தேசிய பாதுகாப்பு அமைச்சின் அனுமதியும் தேவை.

ஆசிரியர் இடமாற்றத்தில் இப்படி ஒரு புதிய நிபந்தனை வந்திருக்கிறது.

ஆசிரியர் விவகாரத்தைக் கவனிப்பது கல்வி அமைச்சு. அவர்களின் நியமனம், பதவி உயர்வு, ஏனைய சலுகைகள், சேவை நலன் ஆகியவற்றை அந்த அமைச்சே கையாண்டு வருகிறது.

அந்த வகையில் இடமாற்றமும் கல்வி அமைச்சினுல் தனித்தே செய்யப்பட்டு வந்தது. இம்முறை திடீர் என்று தேசிய பாதுகாப்பு அமைச்சு ஆசிரியர் இடமாற்றத்தில் கைவைக்க முடிவு செய்ததன் மர்மம் என்ன?

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் கோருபவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களாகவே இருப்பர். வெளி மாவட்டங்களில் நீண்ட காலம் பணிபுரிந்து விட்டுத் தமது சொந்த மண்ணில் கடமையாற்ற விரும்புபவர்களே பலர் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

அவர்கள் வடக்கு, கிழக்குக்கு இடமாற்றம் பெறுவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி எதற்காகத் தேவை? தமிழ் மண்ணுக்குச் சென்றதும் அவர்கள் போராளிகளாக மாறிவிடுவார்கள் என்று அரசாங்கமும் அமைச்சர் அத்துலத்முதலியும் அஞ்சுகிறார்களா?

வெளிமாவட்டத்தில் சேவை ஆற்றிய போது அவர்கள் தீவிரவாத சம்பவங்களில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று அரசாங்கம் சந்தேகிக்கிறதா?

அவ்வாறு சந்தேகம் கொண்டால், அது சரியா, தவறு என்பதை சம்பந்தப்பட்ட ஆசிரியர் வெளிமாவட்டத்தில் சேவையிலிருக்கும் போதே விசாரித்து உண்மையைக் கண்டறிந்திருக்க வேண்டும். அதனை உரிய முறையில் செய்யாது இடமாற்றத்தின் போது 'கழுத்தை நெருக்க' முயற்சிப்பது ஏன்?

வெளிமாவட்டத்தில் கடமை புரிந்த காலத்தில் ஆசிரியர் ஒருவர் குற்றம் எதுவும் செய்திருந்தால் அதற்குரிய தண்டனையை அப்போதே, அங்கேயே வைத்து வழங்கி இருக்க வேண்டும்.

இடமாற்றம் வழங்கப்படும் கடைசி நேரத்தில் விவரம் திரட்டுவதும், விசாரணை வைப்பதும் வெறும் வம்புத்தனமே அன்றி வேறில்லை. எதிலுமே சம்பந்தப்படாத அப்பாவி ஆசிரியர்களுக்கும் சேர்த்து இடமாற்றம் வழங்காமல் தண்டிப்பதற்கான சூழ்ச்சியே இதுவாகும். இது குறித்து ஆசிரியர் சங்கங்கள் ஆட்சேபக் குரல் எழுப்ப வேண்டும். ஆசிரியர்களின் உரிமைகளில் தலையிடும் இந்த அக்கிரமத்தை இறுதிவரை எதிர்த்தாக வேண்டும்.

தமிழர்கள் எல்லோரையும் போராளிகளாகச் சந்தேகிக்கும் தன்மையின் ஒருவித வெளிப்பாடே இப்புதிய நிபந்தனை என்பதனையும் மறந்து விடலாகாது.

எதிலும் சம்பந்தம் இல்லாத தமிழர்களையும் அரசாங்கம் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பது ஒரு விதத்தில் நன்மை பயப்பதாகவும் கொள்ள இடமுண்டு. அரசாங்கத்தின் ஆதரவாளர்களாக இருக்க விரும்புவோரின் போக்கை மாற்றுவதற்கு அது உதவும்.

ஆனுல் ஒன்றை மட்டும் துணிந்து கூறலாம். தமிழர்கள் எங்கு இருந்தாலும் அவர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடத் தயங்கமாட்டார்கள். அடக்கு முறையில் இருந்து மீட்சி பெற்று சுதந்திர மக்களாக வாழ வேண்டும் என்ற உணர்வு தமிழ் மக்கள் மத்தியில் இப்போது வேகமாக வளர்ந்து வருகிறது. அதனை அரசாங்கம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

அரசாங்க ஊழியர்கள் — ஆசிரியர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்காமல் விடுவதன் மூலமோ அல்லது அது போன்ற பழிதீர்க்கும் செயல்களாலோ தமிழர்களின் சுதந்திர வேட்கையைத் தணிக்க முடியாது; உரிமைப் போராட்டத்தை மழுங்கடிக்க முடியாது. இவற்றை அரசு இனியும் உணரவில்லையெனில் அதற்கு யார் என்ன செய்ய முடியும்.....?

## அமெரிக்க உதவி கவலையைத் தருகிறது

பாங்கொக், அக். 21

பாகிஸ்தானுக்கு இராணுவ உதவியை அமெரிக்கா அளிப்பது அதிகரித்து வருவது ஆழ்ந்த கவலையைத் தருகின்றது. இந்த நடவடிக்கை இந்தியா - பாகிஸ்தான் ஆயுதப் போட்டியை வளர்க்கவே வழிவகுக்கும்.

அமெரிக்காவின் இந்த உதவியால் இந்தியா தனது வளங்களை ஆயுத உற்பத்திக்கே செலவிட வேண்டியிருக்கும். இல்லையேல் இந்த நிதி மூலம் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான பல நல்ல திட்டங்களை உருவாக்கலாம்.

கடந்த எட்டு நாட்களாக இந்தோனேஷியா, அவுஸ்திரேலியா, நியுஸிலாந்து, தாய்லாந்து ஆகிய நாடுகளில் பயணம் மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி டில்லி திரும்புமுன் தாய்லாந்தில் இவ்வாறு தெரிவித்தார். (ஒ)

## ஷாமிர் பதவி ஏற்றுர்

தெல்அவிவ், அக். 21

இஸ்ரவேலின் ஒன்பதாவதுபிரதமராக இற்சாக் ஷாமிர் பதவி ஏற்றுர்.

1988 ஆம் ஆண்டு இறுதிவரை இவர் பிரதமர் பதவியில் இருப்பார்.

பிரதமர் ஷாமிரின் அமைச்சரவையில் 25 பேர் அங்கம் வகிப்பர். (ஒ)

## ஜனுதிபதி மறைவுக்கு தலைவர்கள் அஞ்சலி

மபீட்டு, அக். 21

ஞாயிற்றுக்கிழமை விமான விபத்தில் பலியாகிய மொஸாம்பிக் ஜனுதிபதியின் உடல் மொஸாம்பிக் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஜனுதிபதி ஸாமோர மைசெலின் மறைவுக்கு உலக தலைவர்கள் பலர் அஞ்சலி செலுத்தியுள்ளார்கள்.

27 சடலங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஒருவரது சடலம் காணப்படவில்லை.

இந்த விபத்தில் 10 பேர் உயிர் தப்பியுள்ளார்கள்.

ஜனுதிபதி பயணம் செய்த விமானம் தெளிவற்ற குழப்பமான சூழ்நிலைகளில் வீழ்ந்து நொருங்கி விட்டதாக மொஸாம்பிக் வானெலி அறிவித்தது.

மொஸாம்பிக்கில் ஆறு நாட்களுக்கு தேசிய ரீதியில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

வெள்ளிக்கிழமை மரணச் சடங்குகள் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

## நிக்கராகுவாவின் மனுவை ஐ. நா. இன்று விசாரிக்கும்

மனகுவா, அக். 22

நிக்கராகுவா கிளர்ச்சியாளர்களுக்குஅமெரிக்கா நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவு கொடுப்பதை எதிர்த்து நிக்கராக்குவா அரசு தாக்கல் செய்த வழக்கை ஐ. நா. பாதுகாப்புச்சபை இன்று விசாரிக்கும்.

தனிப்பட்ட ஆலோசனைகள் நடத்திய பின்னர் இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ள விருப்பதாக ஐ. நா. ஒப்புக்கொண்டுள்ளது.

காண்டோரா கிளர்ச்சிக்காரருக்கு 10 கோடி டாலர் உதவியை அமெரிக்க ஜனுதிபதி அண்மையில் கொடுத்து உதவியிருந்தார்.

இதனை வன்மையாகக் கண்டித்த நிக்கராகுவா ஜனுதிபதி டானியல் ஒட்டாகா இதுபற்றி தீவிர விசாரணை செய்யுமாறும் எதிர்காலத்தில் அமெரிக்கா பொறுப்பற்ற விதத்தில் நடப்பதற்கு தடைவிதிக்குமாறும் ஐ. நா. பாதுகாப்புசபையிடம் விண்ணப்பித்திருந்தார்.

அமெரிக்கா மத்திய புலனுய்வுத் துறையினரால் நிக்கராகுவாகிளர்ச்சிக்காரருக்கு ராணுவ உதவி கடந்த இருவாரங்களுக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட்ட போது கைதுசெய்யப்பட்டவிமானியும் நிக்கராகுவா அரசிற்குச் சார்பாக சாட்சியம் அளிக்கவுள்ளார். (ஒ)

## இந்தியப் பொலீஸ் 125 வயது பூர்த்தி

புதுடில்லி, அக். 21

இந்தியாவின் பொலீஸ் படை ஆரம்பிக்கப்பட்டு 125 ஆண்டுகள் நிறைவையொட்டி நாட்டின் சகல மாநிலங்களிலும் பொலீஸார் விழா கொண்டாடப்பட்டது.

1861 ஆம் ஆண்டு அக்டோபர் 21 ஆம் திகதி இந்தியாவில் பொலிஸ் படை ஆரம்பிக்கப்பட்டது.

1960 ஆம் ஆண்டு இதே தினத்தில் எல்லைப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 26 பொலீஸார் சீன ஆக்கிரமிப்பாளர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

பொலீஸார் தினத்தை யொட்டி இந்தியா 2 விசேட முத்திரைகளையும் இன்று வெளியிடும். (ஒ)

**வெளி உலகில்**

## புதுவையில் புதிய கட்சி

புதுவை, அக், 21

பாண்டிச்சேரி சட்டசபை அண்ணு திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர்களான டாக்டர் சுப்பிரமணியமும், கே. அன்பழகனும் கடந்த வாரம் தாம் தி. மு. காவில் சேர்ந்ததாக அறிவித்திருந்தனர்.

பின்னர் நேற்று மாலை அவர்கள் புதிய கட்சி ஒன்றை உருவாக்கப் போவதாக அறிக்கை விட்டுள்ளனர்.

புதுச்சேரி சட்ட சபை இன்று மழைக்கால கூட்டத் தொடரை ஆரம்பிக்கும் பொழுது இந்த இரு உறுப்பினர்களதும் நிலைப்பாடு பற்றி சபாநாயகரிடம் அறிவிக்கப் படும். (ஒ)

# யுத்தக் கைதிகள் விடுவிப்பு விவகாரம்:

# விஜே - கிட்டு நடத்திய பேச்சு விவரம்

தமிழீழ விடுதலைப் புலிகளினுல் கைது செய்யப்பட்ட ஸ்ரீலங்கா அரசின் சிப்பாய்கள் இருவரைவிடுவிப்பது தொடர்பாக ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பிரமுகர்கள் திரு. விஜய குமாரணதுங்க, திரு. ஒஸி குணவர்த்தன ஆகியோருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

புலிகளின் சார்பில் யாழ். மாவட்டத் தளபதி கிட்டு, அரசியல் பிரிவு பொறுப்பாளர் திரு. திலீபன், ரஹீம் ஆகியோர் பங்கு பற்றினர்.

இந்தப் பேச்சுவார்த்தை நேற்றுக் காலை புலிகளின் முகாம் ஒன்றில் நடைபெற்றது.

பேச்சுவார்த்தையின் போது உடன் இருந்த எமது செய்தியாளர் பேச்சுவார்த்தை விவரங்களை இங்கு தொகுத்து தருகிறுர்.

விஜே:— உங்களால் கைதுசெய்யப்பட்ட இரண்டு சிப்பாய்களையும் நீங்கள் விடுவிக்கும் பிரச்சினை மனிதாபிமான அடிப்படையில் தீர்க்கப் பட்டால் உலக நாடுகள் உங்களின் உண்மை நிலையை உணரும்.

நீங்கள் உண்மையில் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடும் போராளிகள் என்பதை உலகும் உணரத்தக்க வகையில் உங்கள் நடவடிக்கை அமைய வேண்டும்.

இந்த இருவரையும் விடுவிப்பதற்கு நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்கள்? உங்கள் நிலை என்ன?

கிட்டு:- எமது இயக்கப் போராளிகள் சுமார் 15 பேர் வரையில் கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருக்கிறுர்கள் முதலில் அவர்களின் பூரணபெயர் பட்டியலை அரசு எம்மிடம் தரவேண்டும்.

### தென்னிலங்கை மக்கள் பிரதிநிதி

விஜே:— நாங்கள் அரசின் சார்பிலோ அல்லது இராணுவத்தின் சார்பிலோ பேச இங்கு வரவில்லை. தென்னிலங்கை மக்களின் பிரதிநிதிகளாக இங்கு வந்திருக்கிறேம்.

நீங்கள் வடக்கில் உரிமைகளுக்காகப் போராடுகிறீர்கள். நாங்கள் தெற்கில் உரிமைகளுக்காகப் போராடுபவர்கள்.

கிட்டு:- ஒன்றரை வருடங்களுக்கு முன்னரும் ரெலோ இயக்கத்தினுல் இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள் பிடிக்கப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் நாணயக்கார.

அவர்களை விடுவிப்பதற்கு ரெலோ இயக்கம் விதித்த நிபந்தனைக்கு அரசு செவிசாய்க்கவில்லை. இறுதியில் இரண்டு பேரும் உயிரிழந்தனர்.

நாங்கள் நினைத்தால் கைதான இருவரையும் கொல்லலாம். ஆனுல் அப்படிச் செய்ய விருப்பவில்லை.

இந்த இரண்டு பேர் விடயத்தில் அரசாங்கம் சரியான முறையில் நடப்பதற்கு நீங்கள் அரசை நிர்ப்பந்திக்க வேண்டும் மக்கள் மூலமாக-வெகுஜன தொடர்பு சாதனங்கள் மூலமாக - நிர்ப்பந்திக்க வேண்டும்.

அந்தக் காரணத்தினுல் தான் உங்களை இருதரப்பிற்கும் மத்தியஸ்தம் வகிக்க நடுவராகப் பங்கு பற்ற நாம் அழைத்தோம்.

விஜே:- இந்த இருவரையும் நீங்கள் விடுவிக்காமல் அவர்களுக்கு ஏதேனும் நடந்தால் அதனை சிங்கள இனவெறிவாதிகள் தமக்குச் சார்பாக பிரசாரம் செய்ய உபயோகிப்பார்கள்.

சிறிமா, சில பிக்குமார் இந்தச் சந்தர்ப்பத்தை தமக்கு சாதகமாகப் பாவிப்பார்கள். சிங்கள மக்களை தவருக வழிநடத்த இதனைப் பாவிப்பார்கள்

கிட்டு:- கொல்லப்பட்ட சிப்பாய்களின் உடல்களை நாங்கள் இராணுவத்திடம் ஒப்படைத்தோம்.

அது மனிதாபிமான அடிப்படையில் செய்யப்பட்டது.

நாங்களும் சுமார் 350 தோழர்களை இழந்திருக்கிறேம். அந்தத் தோழர்களின் இறுதிமரியாதை செய்வதற்கு எமக்கும், அத்தோழர்களின் உறவினர்களுக்கும் இருந்த உணர்ச்சி பூர்வமான ஆவல் எங்களுக்குத் தெரியும்.

அந்த அடிப்படையிலேயே நாமாக முன்வந்து - யாரும் கேட்காமலேயே-மிகுந்த அபாயத்துக்கு மத்தியில்-அந்த உடல்களை ஒப்படைத்தோம்.

ஆனுல் உயிருடன் பிடிக்கப் பட்டவர்கள் நிலை அதுவல்ல.

அவர்கள் யுத்தக் கைதிகள். அவர்களும் போராட வந்தவர்கள் தான்.

ஆனுலும் அவர்களைவிடுவிப்பதற்கு வழக்கமாக சர்வதேச ரீதியில் கைக்கொள்ளப்படும் நடவடிக்கையைத் தான் நாங்கள் விரும்புகிறேம்.

அரசிடம் கைதிகளாக இருக்கும் எமது வீரர்களின் பட்டியலைத் தாருங்கள்.

நாங்கள் அதன் பின்னர் எமது தலைவர் பிரபாகரனுடன் தொடர்பு கொள்வோம்.

அவர் கூறும் இருவரை விடுவிக்கும்படி நாம் நிபந்தனை விதிப்போம். அந்த இருவரையும் விடுவித்தால் இந்த இருவரையும் நாம் விடுவிப்போம்.

### மக்கள் முன்னிலையில் விடுவிப்போம்

விஜே:— உங்கள் வீரர்கள் இருவரை விடுவிப்பதுடன் உங்கள் பிரச்சினை தீர்ந்து விடாது, இன்னும் உங்களவர் பலர் சிறையில் இருக்கிறுர்கள்.

இருவருக்கு இருவர் என்று மாற்றீடு செய்தால் அது வெறும் கணக்குடன் முடிந்துவிடும்.

இருவருக்கு இருவர் விடுவிக்கப்பட்டனர் என்று மட்டுமே தென்னகத்தவர்கள் நினைப்பார்கள்.

இதனுல் நீங்கள் புதிதாக எதையும் சாதித்து விடப்போவதில்லை.

ஆனுல் மாருக நீங்கள் இந்த இருவரையும் நிபந்தனையின்றி - தீங்கின்றி — விடுவித்தால் அதனுல் உங்களின் உண்மை நிலையை தென்னகத்தவர்களுக்கு எடுத்துக் கூற நல்ல வாய்ப்புக் கிடைக்கும்.

இந்த ஒன்றைக் காரணமாக வைத்தே உங்களுக்காக நாங்கள் தென் இலங்கையில் போராட முடியும். உங்களுக்காக-போராடுகிறேம்.

ஆனுல் தென்னிலங்கையில் எம்மை புலிகள் என்கிறுர்கள். எம்மைப் பற்றி தவருக கூறுகிறுர்கள்.

ஆனுல் இந்த இருவரையும் நீங்கள் எம்மிடம் விடுவித்தால் நாம் அந்தப் பிரசாரத்தை முறியடிக்கலாம். உண்மையில்-சரியான முறையில்-நாங்கள் உங்களுக்காகப் போராடுகிறேம் என்பதை தென்னிலங்கையருக்குக் காட்டலாம்.

ஆகவே இருவருக்கு இருவர் என்ற கூட்டல் கழித்தல் தீர்வை விடுத்து எமக்கு சாதகமான அரசியல் நிலையை தென்னகத்தில் ஏற்படுத்தக் கூடிய விதத்தில் இருவரையும் விடுவிப்பது நல்லது.

அப்படி விடுவித்தால் அது எமக்கும் நல்லது, உங்களுக்காக தென்னிலங்கையில் நாம் குரல் கொடுப்பதால் உங்களுக்கும் நல்லது.

கிட்டு:— நீங்கள் இந்தச் சூழ்நிலையில் எமது ஆதரவோடு இங்கு வந்ததே உங்களுக்கு அரசியல் ரீதியில் தென் இலங்கையில் அதிக ஆதரவை-மதிப்பை- பெற்றுத் தந்திருக்கிறது என்பது எமக்குத் தெரியும்.

இன்று பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்பட வேண்டும் என தென்னிலங்கையருக்கு உங்கள் உண்மைநிலையை விளக்கி அங்கு பிரசாரம் செய்ய முடியும்.

நீங்கள் இவர்களை எம்மிடம் விடுவித்தால் நாம் இவர்களை அரசிடமோ, இராணுவத்திடமோ கொடுக்க மாட்டோம். தென் இலங்கையர் முன்னிலையில் பெற்றேரிடம்தான் ஒப்படைப்போம்.

நாம் வடக்கு, கிழக்கு மக்களுக்கு முழு அளவில் சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என சோஷலிச அடிப்படையில் கையர் விரும்புகிறுர்கள். ஆனுல் அரசுதான் விரும்பவில்லை.

ஆகவே இந்நிலையில் நீங்கள் இங்கு வந்ததால் உங்களுக்கும் உங்கள் போக்கிற்கும் தென்னிலங்கையில் அதிக மதிப்பே கிடைக்கும்.

ஆகவே இவர்களை வெறுமனே உங்களிடம் நிபந்தனையின்றி விடுவிப்பதால் புதிதாக ஏதும் ஏற்பட்டு விடப்போவதில்லை.

விஜே:— அது சரி. ஆனுல் இராணுவ கமாண்டரிடமோ அல்லது லலித்திடமோ இவர்களை ஒப்படைப்பதால் ஏதும் அதிகமாக உங்களுக்குக் கிடைக்கப் போவதில்லை.

சரண் அடைந்தவர்களை நீங்கள் வெறுமனே விடுவித்ததாகவே அது இருக்கும்.

### 798 சுற்று சுட்டுள்ளனர்

கிட்டு:— அப்படியல்ல. யுத்தக் கைதிகளை எதிர் தரப்புகள் மாற்றிக் கொள்வது தான் சர்வதேச நடைமுறை.

மன்னர், யாழ்ப்பாண பொலீஸ் நிலையத் தாக்குதல்களின் போதும் நாம் மூன்று பொலீஸாரைக் கைது செய்தோம்.

ஆனுல் நாம் அவர்களை நிபந்தனை ஏதுமின்றி- அவர்களுக்கு தீங்கு செய்யாமல் விடுவித்தோம்.

ஏனெனில் அவர்கள் சிவில் நிர்வாகத்தை நிறைவேற்ற வந்த வெறும் அதிகாரிகளே.

ஆனுல் இவர்கள் விடயம் வேறு. இவர்கள் எம்முடன் நேரடியாகப் போராட வந்தவர்கள் இராணுவ மோதலுக்கு வந்தவர்கள்.

இந்த இருவரும் அன்று மோதலுக்கு புறப்பட்ட போது தம்முடன் தலா 400 சுற்று ரவைகளை எடுத்து வந்தவர்கள்.

எம்மிடம்அவர்கள் அகப்பட்ட போது அவர்களிடம் இரண்டு சுற்று ரவைகள் தான் இருந்தன.

798 சுற்று ரவைகளை எம்மை நோக்கி இவர்கள் தீர்த்திருக்கிறுர்கள். ஆனுலும் நாம் அவற்றைச் சகித்துக் கொண்டிருக்கிறேம்.

இவர்களுக்கு எந்தத் தீங்கும் நாம் செய்யவில்லை. அவர்களுக்கு நல்ல மருத்துவ வசதி, உணவு வசதி, தங்குமிட வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறேம்.

ஆனுல் இந்த வீரர்கள் மீது அவர்களின் அரசாங்கம் என்ன மதிப்பு வைத்திருக்கிறது என்பதை நாம் அவர்களுடைய மக்களுக்கு காட்ட வேண்டும்.

இந்த வீரர்களுக்கு சார்பாக அரசு உண்மையாகவே நடக்கிறதா என்பதை நாம் காட்ட வேண்டும்.

மற்றையது சிறையில் இருக்கும்எமது போராளிகள் சம்பந்தப்பட்டது. அந்தப் 15 பேரையும் இலங்கை அரசு வேறு காரணங்களுக்காக விடுவிக்காது. அவர்கள்சிறையில் சித்திரவதைப்பட்டு நாட்களை எண்ணி அங்கேயே மடிய வேண்டுமா? அவர்களை அப்படியே விடலமா?

அவர்களை நாம் மறக்க முடியாது. அவர்களின் நிலை என்ன?

இதை விட்டால் அவர்களை நாம் விடுவிப்பதற்கு வேறு சந்தர்ப்பம் ஏதும் இல்லை.

விஜே:- உங்கள் வாதம் நியாயமானதே. உங்கள் உணர்வுகள் எமக்குப் புரிகிறது.

கிட்டு:— நாம் அரசை மதிக்கவில்லை. இராணுவத்தை மதிக்கவில்லை. ஆனுல் காப்டன் கொத்தலாவலையை மதிக்கிறேம்.

அவரது துவக்குகள் எம்மை நோக்கி நீட்டப்பட்டிருக்கின்றன. எமது துவக்குகளும் அவரை நோக்கி நீட்டப்பட்டிருக்கின்றன.

ஆனுலும் நாம் அவரை மதிக்கிறேம். அவர் ஒரு உண்மையான போராளி வீரர். நேர்மையாவர்.

அவர் எம்முடன் பேகியதை அடுத்து கொல்லப்பட்ட 9 சிப்பாய்களின் உடல்களையும் ஒப்படைத்தோம். ஆனுல் அரசு செய்தது என்ன?

அதைப்பற்றி சிங்கள மக்களிடம் என்ன கூறியது? அரசின் பொய்ப் பிரசாரம் உங்களுக்குத் தெரிந்ததுதானே!

விஜே:— ஒருவேளை அரசு உங்கள் நிபந்தனைக்கு இணங்காவிட்டால் என்ன செய்வீர்கள்!

கிட்டு:- அரசு பகிரங்கமாக அதை அறிவிக்க வேண்டும். அந்த அறிவிப்பே நாம் வேண்டுவது.

அரசு தன்னுடைய ஒவ்வொரு வீரர்களினதும் உயிரில் எத்துணை கரிசனை கொண்டுள்ளது என்பது அப்போதுதான் உலகுக்குத் தெரியவரும்.

ஸ்ரீலங்கா அரசின் ஒவ்வொரு சிப்பாயும் அப்போதுதான் தனது அரசின் உண்மை சொரூபத்தை உணர்ந்து கொள்வார்கள்.

அப்படி உணர்ந்து கொண்டால் அவர்கள் இராணுவத்தை விட்டே ஓடுவார்கள். அப்படி ஓடும் எண்ணத்தில்தான் பல சிப்பாய்கள் இன்று இருக்கிறுர்கள் என்பது எனக்குத் தெரியும்.

ஆனையிறவு முகாமிலிருந்து இப்படி ஓடிய இருவரை நாம் தீங்கின்றி விடுவித்தோம். இப்போது எம்மிடம் அகப்பட்ட இருவரைப் போல் மோதலுக்கு வராமலேயே சரண் அடைந்தவர்களை நாம் நிபந்தனையின்றி தீங்கின்றி விடுவிப்

(4 ஆம் பக்கம் பார்க்க)



**பொய்யாமொழி**

குறள்:

களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

பொருள்:

[illegible] அறிவுடையவராயிருத்தல், அளவு அறிந்து வாழ்தலாகிய ஆற்றலை விரும்பினவரிடத்தில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது!
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
* தரமான வர்ண நிழற்படப் பிரதிகள்
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ளலாம்.

# உதயன்

22 - 10 - 1986 புதன்கிழமை

* வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று ரூ: 5/-
* Processing Free
* விற்பனை வர்ண புகைப்படச் சுருள்கள்
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628

நாவற்குழியில் ஷெல் தாக்குதல்

# இரு குழந்தைகள் தலை சிதறி மரணம்

## தாய் தற்கொலை முயற்சி

கைதடி, அக். 22

நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சிறுமிகள் உயிரிழந்தனர். இதனைப் பொறுக்கமுடியாத சிறுமிகளின் தாயார் நஞ்சு அருந்தித் தற்கொலைசெய்ய முயன்றார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

நேற்றுக்காலை 5-30 மணியளவில் நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து சிப்பாய்கள் வெளியேறி நாவற்குழி சந்தியை நோக்கி வர முற்பட்டனர்.

இதனைக்கண்ட விடுதலைப் புலிகள் தாக்குதலில் ஈடுபட்டனர், சிப்பாய்கள் முன்னேற முடியாத நிலையில் முகாமை நோக்கிப்பின்வாங்கினர். அங்கிருந்து ஷெல் தாக்குதலில் ஈடுபட்டனர்.

முகாமிலிருந்து ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தில் (கேரதீவு வீதிப் பக்கம்) உள்ள ஐயனார் கோயிலடியில் உள்ள சிவனடியார் (செல்லத்துரை) என்பவரது வீட்டுக்கூரை மீதும் ஷெல் ஒன்று விழுந்தது.

சிவனடியார் சிவரஞ்சினி (9 வயது). நாவற்குழி மகாவித்தியாலயத்தில் ஆண்டு 4இல் கல்வி கற்கும் மாணவி), சிவனடியார் சிவசக்தி வயது 10) நாவற்குழி மகாவித்தியாலயத்தில் ஆண்டு 5இல் கல்வி கற்கும் மாணவி) ஆகியஇரு சகோதரிகளும் தலை சிதறி அந்த இடத்திலேயே துடி துடித்து மரணமாகினர்.

படுத்திருந்த தந்தை சிவனடியாருக்கு (வயது 40-நாவற்குழி கண்ணாடி தொழிற்சாலைச் சாரதி) கழுத்திலும் தொடையிலும் காயமேற்பட்டது.

தாய் சிவனடியார் பஞ்சவர்ணத்துக்கும் (வயது 35) காயமேற்பட்டது. சகோதரன் சிவனடியார் சிவராசாவுக்கு (வயது 4) முகத்தில் காயம் ஏற்பட்டது. இவர்கள் மூவரும் சிகிச்சைக்காக யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மற்றும் ஒரு ஷெல் நாவற்குழிச் சந்திக்கண்மையில் கேரதீவு ரோட்டில் உள்ள சுப்பிரமணியம் (வயது 50) என்பவரின் வீட்டின் மாமரத்தில் விழ்ந்து சிதறியது. இதனால் மாமரம் அடியோடு சாய்ந்தது.

இதில் விழ்ந்து சிதறிய ஷெல் துண்டுகளால் சுப்பிரமணியம் காயம் அடைந்தார்.

இவரது மகள் திருமதி புஸ்பராணி ராமகிருஷ்ணன் (வயது 21) என்பவரும் காயமடைந்தார் இவர்கள் இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்

சுப்பிரமணியத்தின் மனைவி நீற்றும்பாவிற்கு கடந்த ஜுன் மாதம் ஹெலிக்கப்டரிலிருந்து வீசிய ஷெல்லினால் கையில் காயம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

நாவற்குழிச் சந்திக்கு அண்மையில் கண்டிரோட்டில் கணபதிரத்தினம் (வயது 42, கள் உற்பத்தியாளர் சங்க விற்பனையாளர்) என்பவரும் காயம் அடைந்து யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

நாவற்குழிச் சந்திக்கு அண்மையில் சின்னத்தம்பி (பரமாந்தி) என்பவரின் வீட்டின்மீது ஷெல் விழுந்ததனால் வீட்டின் ஒருபகுதி சேதம் அடைந்தது.

நீண்ட நாட்களாக அமைதியாக இருந்த நாவற்குழிப் பகுதி இச் ஷெல் தாக்குதலினால் அமைதி இழந்து காணப்படுகிறது. (இ-74)

தமிழ்நாடு அமைச்சரவையில் மாற்றம்

# வீரப்பன் உட்பட 10 அமைச்சர்கள் நீக்கம்

சென்னை, அக். 21

தமிழ்நாடு அமைச்சரவையில் இருந்து 10 அமைச்சர்கள் திடீர் என நீக்கப்பட்டுள்ளனர். முன்னாள் அமைச்சர் ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

முதலமைச்சர் எம். ஜி ராமச்சந்திரனால் அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட இந்த பெரிய மாற்றத்துக்கு மாநில ஆளுநர் எஸ். எல். குரானா அங்கீகாரம் அளித்துள்ளார்.

ஆர். எம். வீரப்பன், சி. அரங்கநாயகம், கே. காளிமுத்து, டாக்டர் எச். பி. ஹாண்டே, ரி. வீரசுவாமி, என். நல்லசுவாமி, எம். ஆர். கோவிந்தன், திருமதி. கோமதி ஸ்ரீநிவாசன், திருமதி விஜயலக்ஷ்மி பழனிசுவாமி, வை. எம். எஸ். யூசுப் ஆகியோரே அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்ட 10 அமைச்சர்களும் ஆகும்.

முன்னாள் தொழில் அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமி மீண்டும் உள்ளூர் நிர்வாகம், தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது பதவியில் உள்ள அமைச்சர்களின் பொறுப்புகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ் நாடு அமைச்சரவையின் பலம் முதலமைச்சர் எம். ஜி. ஆருடன் சேர்த்து 15 ஆக குறைந்துள்ளது. (இ)



நல்லூர் கோவிலின் முன் மண்டபத்தில் ஒளி, கிட்டு, விஜே. (உ)

## வடக்கு, கிழக்கில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மைநிலை புரிகின்றது.

இதுவரை எமக்கு ஒரு பக்கம் பற்றித்தான் சொல்லப்பட்டது. யாழ்ப்பாணம் வந்த பின்னர் தான் மற்றப் பக்கத்தையும் அறியக் கூடியதாக உள்ளது.

இனி நாம் தென் இலங்கை மக்களுக்கு இங்கு நிலவும் உண்மை நிலையைச் சொல்ல முடியும்.

வட பகுதி போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ளதை நாம் கண்டோம். இங்கு தமிழர்களுக்குபோராளிகள் பாதுகாப்பு வழங்குகிறார்கள்.

சாதாரண தமிழ் மக்களைக் கண்டு பேசினோம். அவர்களின் நிலைமைகளைக் கண்டோம். யாழ் நகரின் நிலையையும் அறிந்தோம்.

### போராளிகளுடன் பேச வேண்டும்

தமிழ் இளைஞர்கள் அரச அடக்கு முறைக்கு எதிராக ஆயுதம் தூக்கி போராடுகிறார்கள். தமிழர்களின் அடிப்படை உரிமைகளைக் கேட்டே போராளிகள் போராட்டம் நடத்துகின்றனர்.

தென்னிலங்கையிலும் எமது கட்சி அரசஅடக்கு முறைக்கு எதிராக அரசியல் போராட்டம் நடத்துகின்றது. இது தோற்றால் நாமும் ஆயுதங்களைத் தூக்கிப் போராடுவோம். எமது இலட்சியத்தை அடையும் வரை போராட்டம் தொடரும்

இனப்பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் போராளிகளுடன் நேரடியாகப் பேசியே காணப்பட வேண்டும். இதுதான் எமது நிலை,

வடபகுதி இப்போது தனிநாடே. தனிநாடாகத்தான் இயங்குகிறது, இலங்கை அரசின் நிர்வாகத்தையே காணமுடியவில்லை. அரசு நிர்வாகம் ஸ்தம்பித்துவிட்டது.

தமிழ்ப் போராளிகளின் நண்பன் என்று கூறிக்கொள்வதில் நான் பெருமை அடைகிறேன்,

—இப்படி திரு. விஜய குமாரணதுங்க சொன்னார். (அ-எ)

## கப்டன் கொத்தலாவலை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டன.

முப்பதுக்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் இவர்களைப் பாதுகாத்து வாடி வீடுவரை கொண்டுசென்று ஒப்படைத்தனர்.

புலிகளிடம் இருந்து மீண்டும் பொறுப்பேற்ற கப்டன் கொத்தலாவலை புலிகளுக்கு நன்றி செலுத்தி விஜே குழுவினரை கோட்டைக்கு அழைத்துச் சென்றார்.

பிற்பகல் நான்கு மணி அளவில் பலாலியி இருந்து வந்த ஹெலிகொப்டர் மூலம் விஜே குழுவினர் பலாலிக்கு கொண்டு செல்லப்பட்டனர். (இ-10)

## புலிகளின்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துக்கொண்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பல வாகனங்கள் இந்தப் பவனியில் கலந்து கொண்டன.

கச்சேரி பழைய பூங்காவிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் பாசறைக்கும் விஜே குழுவினர் விஜயம் செய்தனர்.

ஆயுதம் தரித்த புலிகளின் பயிற்சிகளும் அவருக்கு முகாமில் காண்பிக்கப்பட்டன.

அதன் பின்னர் யாழ் நகர் பகுதிகளில் ஷெல் தாக்குதலினால் சேதமடைந்த பகுதிகளும் அவருக்க்கு காண்பிக்கப்பட்டன. (இ-10)

## விஜே இன்று---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களின் பட்டியல் ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு கோட்டை இராணுவ அதிகாரி கொத்தலாவலை கையளித்து இருந்தார். அதில் 11 பேரின் பெயர்கள் மட்டுமே இருந்தன. பெயர்களும் விலாசங்களும் பூரணமாக அவற்றில் காணப்படாததைத் தொடர்ந்து, சரியான பெயர்ப்பட்டியலைத் தரும்படி புலிகள் பிரமுகர்கள் கோரியுள்ளனர்.

சரியான பெயர்ப் பட்டியல் கிடைத்த பின்னரே யார் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதை புலிகள் அறிவிப்பர்.

திரு. விஜயகுமாரணதுங்க, ஜனாதிபதியைச் சந்திக்கும்போது, புலிகளின் கோரிக்கையைச் சமர்ப்பித்துப் பேச்சுக்கள் நடத்துவர்.

அதன் பின்னர் தான் சிறைபிடிக்கப்பட்ட சிப்பாய்கள் பற்றிய இரண்டாம் கட்டம் ஆரம்பமாகும் என்று தெரியவருகின்றது. (அ-எ)

## ஹோட்டலில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஏறியபோது பொது மக்கள் முண்டியடித்துக்கொண்டு அவருக்குக் கை கொடுத்ததைக் காணக்கூடியதாக இருந்தது, (இ-10)

# கோட்டை இராணுவ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்களுடன் காவல் புரிந்தனர்,

காலையில் சரியாக 8. 20 மணியளவில் வாடி வீட்டுப் பகுதியிலிருந்து புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் திலீபன், முன்னணி உறுப்பினர் ரஹீம் ஆகியோர் கோட்டை முகாமை நோக்கி முன்னேறினர்.

அவர்களுக்குப் பின்னால் பத்திரிகையாளர், படப் பிடிப்பாளர்கள் ஆகியோரும் சென்றனர்.

இவ்வேளையில் மாவட்டத் தளபதி கிட்டு வாடி வீட்டுக்கு முன்பான சந்தியின் நடுவே குடை பிடித்தபடி காத்து நின்றார்.

### சைகை தெரிவித்தனர்

கோட்டை முகாமிற்கு அருகே சென்ற ரஹீம், திலீபன் ஆகியோர் அங்கிருந்தவாறு முகாமிற்குள் இருந்த காப்டன் கொத்தலாவலையை நோக்கி முன்னே வருமாறு சைகை செய்து அழைத்தனர்.

இதனையடுத்து காப்டன் கொத்தலாவலை, கேர்ணல் ஆனந்த வீரசிங்க, கோட்டை முகாமுக்குப் பொறுப்பான அதிகாரி கேர்ணல் விமலரத்ன ஆகியோரையும் சில சிப்பாய்களையும் அழைத்துக் கொண்டு பொலிஸ் நிலைய முன் பகுதிக்கு வந்தார்.

திரு. விஜய குமாரணதுங்க, திரு. ஒஸி குணவர்த்தன, ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஜா-எல அமைப்பாளர் திரு. பீலிக்ஸ் பெரேரா, விஜேவின் தனிப்பட்ட புகைப் படப்பிடிப்பாளர் ஆகியோரும் அவர்களுடன் வெளியே வந்தனர்.

வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர், வீடியோ படப்பிடிப்பாளர் ஒருவர், கொழும்புச் செய்தியாளர் ஒருவர் ஆகியோரும் கூட வந்தனர்.

### நட்புறவுடன் உரையாடினர்

காப்டன் கொத்தலாவலையும், மற்றைய இரு கேர்ணல்களும் தங்களது கோட்டை முகாம் வாசலில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னணிப் போராளிகளான திரு. திலீபன் திரு. ரஹீம் ஆகிய இருவருக்கும் கைலாகு கொடுத்து, சுகம் விசாரித்து அவர்களுடன் நட்புறவுடன் உரையாடினார்கள்.

இந்தச் சந்திப்பின் போது இருதரப்பினரும் தம்முடன் எந்த ஆயுதங்களையும் வைத்திருக்கவில்லை.

சில நிமிட நேரம் நீடித்த இந்தச் சந்திப்பு மிகுந்த சினேகபூர்வமாக அன்னியோன்னியமாக இடம்பெற்றது.

கப்டன் கொத்தலாவலை விஜே குழுவினரை போராளிகளிடம் ஒப்படைத்தார்.

அவ்வேளையில் திரு. ரஹீம் கப்டன் கொத்தலாவலையிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

### போய் வாருங்கள்

சுமார் 50 யார் தொலைவில் தனியாக நின்றிருந்த கிட்டுவைச் சுட்டிக் காட்டிய ரஹீம்—

உங்களை வரவேற்பதற்காக அங்கு 'கிட்டு' காத்து நிற்கிறார். நீங்கள் அவரைச் சந்திக்கலாம்' என்று கப்டன் கொத்தலாவலையிடம் கூறினார்.

பதிலாகப் புன்னகை முகிழ்த்த கொத்தலாவலை 'போய் வாருங்கள்' என விஜேக்கும் போராளிகளுக்கும் அன்புடன் விடை கொடுத்தார்.

### கிட்டு வரவேற்றார்

அதனை அடுத்து வாடி வீடு முகப்புவரை நடந்து வந்த விஜே குழுவினர் அங்கு திரு. கிட்டுவினால் அன்புடன் வரவேற்கப்பட்டனர்.

புலிகளின் வாகனத்தில் ஏறிய விஜே குழுவினர் நேரடியாக நல்லூரில் உள்ள அவர்களின் முகாமொன்றிற்குச் சென்றனர்.

அங்கு தங்கியிருந்த யுத்தக் கைதிகளான சிப்பாய்களையும் அவர்கள் சந்தித்தனர்.

அவர்களுடைய உடல் நிலை குறித்தும், சுகதுக்கம் குறித்தும் விஜே குழுவினர் அவர்களுடன் சுமார் அரைமணி நேரம் உரையாடினர்.

வசதியான அறை ஒன்றில் தங்கியிருந்த இரண்டு சிப்பாய்களுக்கும் மனத்தெம்பு அளிக்கும் வகையில் விஜே குழுவினர் தைரியமூட்டிப் பேசினர்.

### 40 நிமிடம் பேச்சு

அதன் பின்னர் சிப்பாய்களை விடுவிப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது.

சுமார் 40 நிமிடநேரம் நீடித்த இந்தப் பேச்சுக்களை அடுத்து 'விஜே' குழுவினர் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.

அதன் பின்னர் கோவில் வாசலில் கூடியிருந்த பொதுமக்கள் முன்னிலையில் விஜே உரையாற்றினார்.

அங்கிருந்த விஜே குழுவினர் புலிகளின் யாழ் மாவட்ட பிரதான முகாமிற்குச் சென்றனர்.

அங்கு விஜயகுமாரணதுங்க பத்திரிகையாளரைச் சந்தித்தார். (உ)

# யுத்தக் கைதிகள் விடுவிப்பு...

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

போம்.

இந்த இருவர் விடயத்திலும் நாம் அப்படி நடக்க முடியாது.

எமது நிபந்தனைக்கு அரசு இணங்காவிட்டால் நாம் இவர்கள் உயிருக்கு ஆபத்து ஏதும் ஏற்படாது என்று மட்டும் உறுதி கூறுவேன்.

ஆனாலும் நீங்கள்தான் அரசை இணங்கச் செய்வதற்கு நிர்ப்பந்திக்கும் வகையில் தென்னிலங்கை மக்களை திசை திருப்ப வேண்டும். அதனால்தான் உங்களை நாடினோம்.

விஜே:- ஆம்நாங்கள் அதனைச் செய்வோம். உண்மையை எடுத்துச் சொல்வோம்.

கிட்டு:- நேற்றிரவு 9 மணியளவில் கப்டன் கொத்தலாவலை என்னுடன் தொடர்பு கொண்டார். தாம் நேரடியாக எமது முகாமுக்கு வந்து பேசி இந்த இருவர் சம்பந்தமான பிரச்சினையைத் தீர்க்கலாம் என்றார் அவர்.

தானாகவே எங்களை நம்பி வருவதற்கு அவர் முயற்சித்தார்.

நாம் அவரை முழு அளவில் நம்புகிறோம்.

ஆனாலும் அவர் அப்படி முன்வந்ததை தனிப்பட்ட முறையில் பேச வந்ததை அவரது தனி முடிவாக நாம் கருதவில்லை. அரசு பின்னணியில் இருக்கிறது.

ஆனால் கொத்தலாவலை மட்டத்தில் இப்பிரச்சினை தீர்ந்தால் அதற்கு வேறு வர்ணம் பூச அரசு முயலும் தமக்கும் இந்த விடுவிப்பு பேச்சுவார்த்தைக்கும் தொடர்பு இல்லை என அரசு கூறும் இது கீழ் மட்டத்தில் இராணுவ அதிகாரி ஒருவருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட ஒரு உடன்பாடு என்று அரசு சொல்லும்.

அதனால்தான்நாம்அவர் மூலம் கைதிகள் பரிமாற்றத்தைச் செய்யவில்லை.

கைதிகள் பரிமாற்றத்துக்கு அவர் தயாராக இருந்த போதும் நாம் உங்களை நாடியது அதனால்தான்.

வெளிநாட்டு நிருபர் ஒருவர்:- யாழ் கோட்டைக்கு பொறுப்பான அதிகாரி கேர்ணல் விமலரத்னவை நான் நேற்று பேட்டி கண்டேன்.

இந்த இரண்டு சிப்பாய்கள் தொடர்பாக அவர் கலங்கிய நிலையில் இருக்கிறார்.

யுத்தக் கைதிகள் பரிமாற்றத்துக்கு தாம் தயார் என்று அவர் கூறியிருக்கிறார்.

கிட்டு:- பார்த்தீர்களா! கொழும்பிலிருந்து வந்த கட்டளையில்லாமல் பின்னணியில் அரசின் சம்மதம் இல்லாமல் இவர் இப்படிக் கூற முடியுமா? அதை வெளியே காட்டத்தான் நாம் உங்களை அழைத்திருக்கிறோம்.

விஜே:- நீங்கள் சொல்வது சரி. உங்களிடம் கைது செய்யப்பட்ட உங்கள் போராளிகள் 11 பேரின் பெயர்ப்பட்டியலை காப்டன் கொத்தலாவலை தந்திருப்பதாக அறிகிறேன் அது சரியா?

கிட்டு:- இல்லை அவை சரியான விளக்கமுள்ள பட்டியல்கள் அல்ல. பெயர்களும் தெளிவாக இல்லை. கைது செய்யப்பட்ட இடம், காலம், கைதானவர்களின் மறு பெயர்கள் என்பன அதில் குறிப்பிடப்படவில்லை.

விஜே:- சரி நாங்கள் கேர்ணலுடன் பேசுகிறோம். உங்களுக்குத் தேவையான பட்டியலைப் பெற்றுத் தருகிறோம். அரசுடன் பேசுவோம். இணக்கமான தீர்ப்பு ஏற்பட முயற்சிப்போம்.

ஆனால் நீங்கள் எங்களுக்கு ஒரு உறுதிமொழி தர வேண்டும்.

லலித்துடன் பேசி அவரிடமோ அல்லது திரு. பஞ்சலிங்கம் மூலமோ நீங்கள் இவர்களை விடுவிக்கக் கூடாது. எங்கள் மூலமே விடுவிக்க வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் நீங்கள் இதனைக் கடைப்பிடிக்க வேண்டும்.

கிட்டு:- நாங்கள் உங்கள் கோரிக்கையை ஏற்கிறோம். ஆனால் ஒரு விடயம்.

நீங்கள் திரும்பிப் போய் விடுவிப்பிற்கான முயற்சியில் ஈடுபடலாம். எல்லா ஏற்பாடுகளையும் செய்யலாம். ஆனால் எதுவும் பின்கதவால் நடக்கக் கூடாது. அரசின் இணக்கம் பகிரங்கமாக அறிவிக்கப்படவேண்டும்.

மற்றைய விடயங்களில் அரசு கூறும் பொய் அறிக்கையினை நாங்கள் ஏற்கமாட்டோம். அந்த விடயத்தில் நீங்கள் [illegible] இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை
மின்சார நிலுவைகள்
அறவிடுதல்

மின் மொத்தக் கொள்வனவுக் கொடுப்பனவாக யாழ் அபிவிருத்திச் சபையால் இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தவேண்டிய 350 இலட்சம் ரூபாவை உடன் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மின்பாவனையாளர்கள் தங்கள் பெயரிலுள்ள நிலுவைகளைச் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு சரிபார்த்து, உடன் செலுத்தி ஒத்துழைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறேன். மூன்று மாதங்களுக்கு மேல் மின் கட்டணம் செலுத்தாமல் உள்ள மின் பாவனையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்ட பின், இரு நாட்களுக்குள் நிலுவையைச் செலுத்தத் தவறின் மேலதிகமாக நிலுவையின் 10%ம் தண்டமாக அறவிடப்படும் என்பதை இத்தால் சகல மின்பாவனையாளர்களுக்கும் அறியத் தருகிறேன்.

வை. மு. பஞ்சலிங்கம்,
செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை.

அபிவிருத்திச்சபை அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்.
1986-10-20.

உடன் விற்பனைக்கு உண்டு

விரைவில் பலன் தரக்கூடிய நல்ல இன தென்னம்பிள்ளைகள் விற்பனைக்குண்டு. தென்னை ஆராய்ச்சியாளர்களின் போதனைக்கு அமைய நாற்றுப் போடப்பட்டவை,

மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

ஷப்ரு றிலேற்ரேஸ்
தென்னந் தோட்டம்,
குடமியன்,
வரணி.

விளம்பர இல: 37,
மே/பா உதயன்,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

"25-ம் திகதி முதல் சிறிலங்கா முத்திரைகள் குடாநாட்டிற்குள் உள்ளூர் சேவைக்கு முற்றாகத் தடை"

ஈழம் முத்திரைகளுக்கான
மொத்த விற்பனை

ஈழம் முத்திரைகளை மொத்தமாக கொள்வனவு செய்ய விரும்புவோர் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

மினி சினிமா ஒன்றியம்
தலைமை அலுவலகம்
ஸ்ரீதர் தியேட்டர்
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 22-10-1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15. Second Lane Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Numbe- QJ60N86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org